# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.138/2013 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | (DW–02) |
| **பெயர்** | :– | **திரு.முருகன்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு ஜூன்திங்கள் 30 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

1, 2, 3, 5, 9, 10, 13, 14, 15, 18 எதிரிகள் தோன்றினர். 8, 2, 7, 16, 17 எதிரிகள் தோன்றவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் கடலூர் மண்டலத்தில் உதவி மேலாளராக பணிபுரிகிறேன். பாரதிதாசன் என்பவர் எங்கள் மண்டலத்திற்கு உட்பட்ட சிதம்பரம் 2 ஆம் பணிமனையில் நடத்துநராக பணிபுரிந்தார். 38 ஆண்டுகளாக பணிபுரிந்தார். குறிப்பிட்ட தடம் என்று இல்லை. எந்த தடத்திற்கு அவ்வப்போது தேவைப்படுகிறதோ அந்த தடத்தில் நடத்துநராக அனுப்பப்படுவார். அவருடைய பணியாளர் எண்.CR1992 ஆகும்.

அவருக்கு 8 மணிநேர வேலை. சிலநேரம் 12 மணிநேரமும் வேலை செய்வார்கள். தொலைதூரம் சென்றால் 16 மணி நேரம்முதல் 24 மணி நேரம்-வரை ஆகும். பாரதிதாசனின் முகவரி விவரம் நான் கொண்டு வந்த பதிவேட்டில் இல்லை. பாரதிதாசன் சம்மந்தப்பட்ட வருகைபதிவேட்டின் 2008 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையிலான பதிவின் சான்றிட்ட நகலை கொடுக்குமாறு இந்த வழக்கில் அழைப்பாணை வந்தது. கையால் கோரப்பட்ட வருகை பதிவேடு 10 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்திற்கு உரியதாக உள்ளது. கையால் எழுதப்படும் வருகை பதிவேடு 10 ஆண்டுக்கு ஒருமுறை அழிக்கப்படும். அதனால் அந்த பதிவேடு இல்லை. கணிணியில் பதிவு செய்யப்பட்ட பதிவு மட்டும் உள்ளது. அதன் பிரதியை எடுத்து வந்துள்ளேன். அந்த கணிணி பதிவு **சா.சா.ஆ.-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

16.05.2008 ஆம் தேதியன்று பாரதிதாசன் எந்த பேருந்தில் எந்த தடத்தில் எத்தனை மணிமுதல் எத்தனை மணிவரை பணியில் இருந்தார் என்ற விவரம் சாட்சி தரப்பு 2 ஆம் சான்றாவணத்தில் இல்லை என்றால் சரிதான். சில நேரங்களில் வருகை பதிவேட்டில் கையொப்பம் இட்டிருந்தாலும் பேருந்து

எதுவும் கொடுக்காமல் பணிமனையிலேயே காத்திருப்பில் இருக்கவும் வாய்ப்புள்ளது என்றால் சரிதான். பணிமனையில் இருக்கும்போது உள்ளே வைத்து பூட்டுவதற்கு வாய்ப்பில்லை. ஒருவேளை வெளியே சென்றுவிட்டால் தெரிவந்தால் நடவடிக்கை எடுப்போம்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.